வெள்ளிக்கிழமை (ஜுமுஆ குத்பா) உரை

நாள் : ரபீவுல் ஆகிர் 7 ஹிஜ்ரி 1448 - கி.பி 18-9-2026 வெள்ளிக்கிழமை

# தலைப்பு:- திருமணத்திலும் விவாகரத்திலும் ஊடுருவியுள்ள தவறான பழக்க வழக்கங்கள்

அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது. அவன் மகத்துவமிக்க குர்ஆனைக் கொண்டு நம்மை ஏனைய சமூகங்களை விட மேன்மைப்படுத்தியுள்ளான்; அச்சமூட்டி எச்சரிக்கும் மற்றும் நன்மாராயமளிக்கும் வசனங்கள் மூலம் நமது உள்ளங்களைச் சீர்படுத்தினான். அதற்கு முன்னிருந்தும் அதற்குப் பின்னிருந்தும் அதில் எவ்விதப் பொய்யும் இல்லை; ஏனெனில் அது ஞானமிக்கவனும் புகழுக்குரியவனுமாகிய இறைவனிடமிருந்து அருளப்பட்டதாகும்.

அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணை யாரும் இல்லை என்று நான் சாட்சியமளிக்கின்றேன்; இச்சாட்சியத்தின் நற்பலன் மறுமை வரை நிலைத்திருக்கும். மேலும், முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனுடைய அடியாரும் தூதருமாவார்கள் என்றும் சாட்சியமளிக்கின்றேன். இறைவன் அவருக்கும், மேன்மையும் நேர்வழியும் பெற்ற அவருடைய குடும்பத்தினருக்கும், தோழர்களுக்கும் ஏராளமான சாந்தியும் சமாதானமும் பொழிவானாக!

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ

ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வை அஞ்சவேண்டிய முறைப்படி அஞ்சுங்கள்; மேலும், நீங்கள் முஸ்லிம்களாக அன்றி மரணிக்காதீர்கள். - (அல்குர்ஆன் ஆலு இம்ரான் 3 : 102)

**முஸ்லிம்களே!**

இஸ்லாமிய மார்க்கத்தின் அடிப்படை விதிகளில் ஒன்று, அல்லாஹ் தன் அடியார்களுக்கு மார்க்கத்தைப் பின்பற்றுவதை எளிதாக்கியுள்ளான். வீணான சிரமங்களையும் நெருக்கடிகளையும் நீக்கியுள்ளான். இதனால்தான் குர்ஆன் மற்றும் சுன்னாவின் சான்றுகள் இந்த மகத்தான அடிப்படையை வலியுறுத்தித் தொடர்ந்து வருகின்றன.

இறைவன் கூறுகிறான்:

يُرِيدُ اللَّهُ بِكُمُ الْيُسْرَ وَلَا يُرِيدُ بِكُمُ الْعُسْرَ

அல்லாஹ் உங்களுக்கு இலகுவானதையே விரும்புகிறான்; மேலும் உங்களுக்கு கஷ்டமானதை விரும்பமாட்டான். - (அல்குர்ஆன் சூரா அல்-பகரா 2 : 185)

மேலும் கூறுகிறான்:

وَمَا جَعَلَ عَلَيْكُمْ فِي الدِّينِ مِنْ حَرَجٍ

இன்னும் இம்மார்க்கத்தில் அவன் உங்களுக்கு எந்தச் சிரமத்தையும் ஏற்படுத்தவில்லை. - (அல்குர்ஆன் சூரா அல்-ஹஜ் 22 : 78)

மேலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டுதலும் இந்த அடிப்படையிலேயே அமைந்துள்ளது. இரு விஷயங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் உரிமை தரப்பட்டால், அது பாவமாக இல்லாதவரை, அவற்றில் மிகவும் இலகுவானதையே அவர்கள் தேர்ந்தெடுப்பார்கள்.

இவ்விதி வணக்க வழிபாடுகள் மற்றும் கொடுக்கல்-வாங்கல் என அனைத்திலும் செல்லுபடியாகும் குறிப்பாக சொல்வதென்றால், குடும்ப விவகாரங்களில் இது மிகவும் அவசியமானதாகும். ஏனெனில் குடும்பமே சமூகத்தின் மூலக்கூறாகும். மார்க்கம் கொண்டுவந்த எளிமை குடும்பத்தில் நுழையும் போதெல்லாம் வீடுகள் அமைதி பெறுகின்றன; திருமணம் இலகுவாகி செலவுகள் குறைகின்றன; விவாகரத்தின் போதும் உரிமைகள் பேணப்படுகின்றன.

ஆனால், மக்கள் மார்க்க வழிகாட்டுதலுக்குப் பதிலாகச் சிரமம் தரும் பழக்கவழக்கங்களையும் விசித்திரக் கலாச்சாரங்களையும் மாற்றிக்கொள்ளும்போது, எளிமை சிரமமாக மாறுகிறது. அல்லாஹ் எதனை அமைதிக்கும் அன்பிற்கும் காரணமாக ஆக்கினானோ, அதுவே சிரமத்திற்கும் சண்டைக்கும் வழியாகிவிடுகிறது.

**முஃமின்களே!**

வேதனைக்குரிய விஷயம் என்னவென்றால், சிலர் மார்க்கச் சட்டங்களால் வழிநடத்தப்படுவதை விட சமூகப் பழக்கவழக்கங்களாலேயே அதிகம் வழிநடத்தப்படுகிறார்கள். சில தவறான மற்றும் சீரழிந்த கலாச்சாரங்கள், "மக்களிடையே இதுவே இன்று நடைமுறையில் உள்ளது" அவற்றில் மார்க்க ஆதாரங்களை விட முற்படுத்தப்படுகின்றன. ஆச்சரியம்! மக்களின் செயல்பாடால் ஆனால் உண்மையின் அளவுகோல்? என்ன?

அல்லாஹ் கூறுகிறான்:

وَإِنْ تُطِعْ أَكْثَرَ مَنْ فِي الْأَرْضِ يُضِلُّوكَ عَنْ سَبِيلِ اللَّهِ إِنْ يَتَّبِعُونَ إِلَّا الظَّنَّ وَإِنْ هُمْ إِلَّا يَخْرُصُونَ

பூமியிலுள்ளவர்களில் பெரும்பாலோரை நீர் பின்பற்றினால், அவர்கள் உம்மை அல்லாஹ்வின் பாதையிலிருந்து வழி கெடுத்துவிடுவார்கள். அவர்கள் ஊகத்தையே பின்பற்றுகிறார்கள்; மேலும் அவர்கள் கற்பனை மட்டுமே செய்கிறார்கள். - (அல்குர்ஆன் சூரா அல்-அன்ஆம் 6 : 116)

மேலும் சிலர் நபிகளாரின் சுன்னாவிற்கு மாறுசெய்வதை விட மக்களின் பேச்சுகளுக்கே அதிகம் பயப்படுகிறார்கள். அதனால் தான் அவர்களில் ஒருவர் கூறுகிறார்: "இது வீண்

சிரமம் என்று எனக்குத் தெரியும், ஆனாலும் மக்கள் என்ன சொல்வார்கள்?" இவ்வாறாக மக்களின் பார்வையே வீடுகளை ஆட்டிப்படைப்பதாக மாறுகிறது.

அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் கூறியதாக அபூ நுஐம் (ரஹ்) அவர்கள் பதிவு செய்கிறார்கள்: "உங்களில் யாரும் சுயபுத்தியில்லாத 'இம்மஆ' (மற்றவர்கள் செய்வதை அப்படியே கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றுபவராக) ஆகிவிட வேண்டாம்." தோழர்கள்: "அபூ அப்திர் ரஹ்மானே! இம்மஆ என்றால் யார்?" என்று கேட்டனர். அதற்கு அவர்கள்: "அவன் கூறுவான்: 'நான் மக்களுடன் இருக்கிறேன்; மக்கள் நேர்வழி பெற்றால் நானும் நேர்வழி பெறுவேன்; அவர்கள் வழிகெட்டால் நானும் வழிகெடுவேன்.' எச்சரிக்கை! மக்கள் நிராகரித்தாலும் தான் நிராகரிக்க மாட்டேன் என்று உங்களில் ஒவ்வொருவரும் தன் மனதை உறுதிப்படுத்திக்கொள்ளட்டும்" என்றார்கள். (நூல் : அபு நுஐம் அல் ஹ இல்யா )

**முஃமின்களே!**

அல்லாஹ் கணவன் மீது மஹரை கடமையாக்கி, அதை மனைவிக்கு மட்டுமே உரிய உரிமையாக்கியுள்ளான்.

அல்லாஹ் கூறுகிறான்:

وَآتُوا النِّسَاءَ صَدُقَاتِهِنَّ نِحْلَةً فَإِنْ طِبْنَ لَكُمْ عَنْ شَيْءٍ مِنْهُ نَفْسًا فَكُلُوهُ هَنِيئًا مَرِيئًا

பெண்களுக்கு அவர்களின் மஹரை மகிழ்ச்சியோடு கொடுத்துவிடுங்கள். அதில் ஏதேனும் ஒன்றை அவர்கள் மனமுவந்து உங்களுக்குக் கொடுத்தால், அதை விருப்பத்துடனும் மகிழ்ச்சியுடனும் உண்ணுங்கள். - (அல்குர்ஆன் சூரா அந்-நிஸா 4 : 4)

மனைவியின் மனதை மகிழ்விப்பதற்காக மஹருடன் ஆடை, ஆபரணம், வாசனை திரவியங்கள் போன்ற எளிய பரிசுகளும் வழங்கப்படலாம் (நமது சமூகத்தில் இது 'தஸ்ஸா' அல்லது சீர்வரிசை எனப்படுகிறது). ஆனால் இன்று இது தன் நோக்கத்திலிருந்து விலகி, வீண் பெருமை, போட்டி மற்றும் ஆடம்பரக் காட்சிக்கான ஒரு களமாக மாறிவிட்டது. குடும்பங்களிடையே தேவையற்ற செலவுகளையும் ஆடம்பரப் போட்டியையும் திறந்துவிட்டுள்ளது. இத்தகைய நடைமுறைகள் மார்க்கம் வலியுறுத்தும் எளிமைக்கும், வீண்விரயம் மற்றும் பெருமையை எதிர்ப்பதற்கும் முற்றிலும் எதிரானவை.

ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

إِنَّ مِنْ يُمْنِ الْمَرْأَةِ تَيْسِيرَ خِطْبَتِهَا، وَتَيْسِيرَ صَدَاقِهَا، وَتَيْسِيرَ رَحِمِهَا

நிச்சயமாக ஒரு பெண்ணின் பரக்கத் (அருள்) என்பது அவளது திருமணம் இலகுவாக இருப்பதிலும், அவளது மஹர் இலகுவாக இருப்பதிலும், அவளது கருப்பை (கருவை ஏற்கும் வகையில் குழந்தைப் பேறு) இலகுவாக இருப்பதிலும் உள்ளது. (நூல் : - அஹ்மத்)

**முஃமின்களே!**

இக்காலத்தில் மக்களுக்குச் சுமையாக மாறியுள்ள மற்றொரு விஷயம்: திருமணத்திற்கு முன்னும் பின்னும் நடத்தப்படும் பலதரப்பட்ட விருந்துகளும் விழாக்களுமாகும். நிக்காஹ் முடிந்தவுடனேயே தொடர்ச்சியான நிகழ்வுகளும், விருந்துகளும், கொண்டாட்டங்களும் தொடங்குகின்றன. திருமணம் என்பது தொடர் செலவுகளின் சங்கிலியாகவே மாறிவிட்டது.

மகிழ்ச்சியை வெளிப்படுத்துவது தவறல்ல, அது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டதே. ஆனால் சிக்கல் எங்கிருக்கிறதென்றால்: ஆடம்பரத்திலும், வீண் சிரமத்திலும், இவற்றைச் செய்யாவிட்டால் சமூகத்தில் அவமானம் என்ற நிலையை உருவாக்குவதிலும் தான் உள்ளது. மார்க்கம் எளிமையாக்கிய மகிழ்ச்சி, குடும்பங்களைச் கடனாளிகளாக்கும் நிதிச் சுமையாக மாறுகிறது.

அனஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரழி) அவர்களின் ஆடையில் மஞ்சள் நிறக் கரையைப் பார்த்த நபி (ஸல்) அவர்கள்: "இது என்ன?" என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள்: "நான் ஒரு பெண்ணை ஒரு பேரீச்சம்பழக் கொட்டையின் எடையளவு தங்கத்தை மஹராகக் கொடுத்து திருமணம் செய்து கொண்டேன்" என்றார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள்:

بَارَكَ اللَّهُ لَكَ، أَوْلِمْ وَلَوْ بِشَاةٍ

அல்லாஹ் உமக்கு பரக்கத் செய்வானாக! ஓர் ஆட்டையேனும் வலீமா (மணவிருந்து) அளிப்பீராக! - (நூல்:- புகாரி, முஸ்லிம்)

நான் சொல்வதை நீங்கள் கேட்கிறீர்கள், எனக்காகவும் , உங்களுக்காகவும் அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புத் தேடுகிறேன். நீங்களும் அவனிடம் பாவ மன்னிப்புத் தேடுங்கள், நிச்சயமாக அவன் மிகவும் மன்னிப்பவனும் கிருபையுடையவனுமாவான்.

## இரண்டாவது குத்பா

அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது. அவன் செய்த நன்மைகளுக்காக அவனுக்கே புகழ் அனைத்தும்.

**அம்மா பஅத்:**

அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள். அவனை அஞ்சுவதிலேயே அடியார்களுக்கு மகிழ்ச்சி உள்ளது.

அல்லாஹ் கூறுகிறான்:

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ وَلْتَنْظُرْ نَفْسٌ مَا قَدَّمَتْ لِغَدٍ وَاتَّقُوا اللَّهَ إِنَّ اللَّهَ خَبِيرٌ بِمَا تَعْمَلُونَ

ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; மேலும் ஒவ்வொரு ஆத்மாவும் நாளைக்காக (அதாவது மறுமைக்காக) தான் என்ன தயார் செய்து வைத்துள்ளது என்பதைப் பார்க்கட்டும். அல்லாஹ்வை அஞ்சுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கு அறிபவன். (அல்குர்ஆன் சூரா அல்-ஹஷ்ர் 59 : 18)

**முஸ்லிம்களே!**

திருமணத்தில் வீண் கலாச்சாரங்கள் புகுந்தது போல, விவாகரத்திலும் (தலாக்) மார்க்க நோக்கத்தைச் சீர்குலைக்கும் புதிய நடைமுறைகள் ஊடுருவியுள்ளன.

இஸ்லாத்தில் தலாக் என்பது அவசியத்தின் போது அனுமதிக்கப்பட்ட ஒன்றாக இருந்தாலும், அது அன்பும் கருணையும் கொண்டு கட்டப்பட்ட ஒரு பந்தத்தின் முடிவாகும்.

எனவேதான், மார்க்கம் கண்ணியத்தைப் பேணவும், உரிமைகளைப் பாதுகாக்கவும், பழிவாங்கும் எண்ணத்தைத் தடுக்கவும் ஒழுக்க நெறிகளை வகுத்துள்ளது. இதில் உருவான மிகவும் அருவருப்பான ஒரு புதிய கலாச்சாரம் தான் "தலாக் பார்ட்டி" (விவாகரத்துக் கொண்டாட்டம்) என்பதாகும்!

ஒரு குடும்பம் உடையும், பிள்ளைகள் பாதிக்கப்படும் வேதனைமிக்க தருணத்தைக் கொண்டாட்டமாக மாற்றுவது, மார்க்கத்தின் நோக்கத்திற்கே எதிரானது.

அல்லாஹ் கூறுகிறான்:

فَإِمْسَاكٌ بِمَعْرُوفٍ أَوْ تَسْرِيحٌ بِإِحْسَانٍ

முறையாகச் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும் அல்லது நன்முறையில் விடுவித்து விட வேண்டும். (அல்குர்ஆன் சூரா அல்-பகரா 2 : 229)

நன்முறையில் விடுவிப்பது என்பது கூச்சலிடும் ஆரவாரங்களோடு விவாகரத்தைக் கொண்டாடுவதோ, மற்றவரைப் பழிவாங்குவதோ அல்ல. மாறாக, ஒழுக்கம், ரகசியம் பேணுதல், உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் பிள்ளைகள் மீது இரக்கம் காட்டுதலோடு அந்த அத்தியாயத்தை முடிப்பதாகும்.

ஜாபிர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

إِنَّ إِبْلِيسَ يَضَعُ عَرْشَهُ عَلَى الْمَاءِ، ثُمَّ يَبْعَثُ سَرَايَاهُ، فَأَدْنَاهُمْ مِنْهُ مَنْزِلَةً أَعْظَمُهُمْ فِتْنَةً...

நிச்சயமாக இப்லீஸ் தனது சிம்மாசனத்தை நீரின் மீது அமைக்கிறான். பிறகு தன் படைகளை அனுப்புகிறான். அவர்களில் அவனுக்கு மிக நெருக்கமானவன் யாரெனில், அதிகக் குழப்பத்தை உண்டாக்குபவனே. அவனிடம் ஒருவன் வந்து 'நான் இன்னின்ன செய்தேன்' என்பான். அதற்கு அவன் 'நீ எதுவும் செய்யவில்லை' என்பான். பிறகு மற்றொருவன் வந்து 'கணவனுக்கும் அவனது மனைவிக்கும் இடையே பிரிவினையை உண்டாக்கும் வரை நான் அவனை விடவில்லை' என்பான். அப்போது இப்லீஸ் அவனைத் தனக்கு அருகில் அணைத்துக் கொண்டு 'நீயே சிறந்தவன்!' என்பான். (நூல்:- முஸ்லிம்)

ஷைத்தான் விரும்பும் ஒரு விஷயத்தை ஒரு முஸ்லிமான மனிதன் எப்படிக் கொண்டாடுவான்?! இக்கலாச்சாரம் நமது நாட்டில் இல்லாவிட்டாலும், சில சமூகங்களில் சமூக வலைதளங்கள் மூலம் பரப்பப்பட்டு வருகிறது.

**பாக்கியமிக்கவர்களே!**

திருமணமும், தலாக்கும் வாழ்வின் முக்கியமான காரியங்கள் ஆகும். இஸ்லாம் இவற்றை மக்களின் மன இச்சைகளுக்கோ அல்லது மாறும் கலாச்சாரங்களுக்கோ ஏற்றபடி விட்டுவிடவில்லை. மாறாக மார்க்கத்திற்கு உடன்பட்ட கலாச்சாரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்; மார்க்கத்திற்கு மாறுபட்டவை எவ்வளவு பரவலாக இருந்தாலும் நிராகரிக்கப்படும்.

எனவே, வாலிபர்களுக்கு நிலையை இலகுவாக்குங்கள்; தலாக் சம்பவித்தால் அதை நன்முறையில் அமையுங்கள்.

وَلَا تَنسَوُا الْفَضْلَ بَيْنَكُمْ

உங்களுக்கிடையே உள்ள நன்மைகளை மறந்துவிடாதீர்கள். (அல்குர்ஆன் சூரா அல்-பகரா 2 : 237)

யா அல்லாஹ்! பொறுப்புகளை நிறைவேற்ற எங்களுக்கு உதவி செய்வாயாக; துரோகத்திலிருந்தும் சதியிலிருந்தும் எங்களைக் காத்தருள்வாயாக. ஹராமானவற்றிலிருந்து தடுத்து, உனது ஹலாலானவற்றைக் கொண்டு எங்களுக்குப் போதுமாக்குவாயாக. ஈமானை எங்கள் இதயங்களில் பிரியமானதாக்கி அதை அழகாக்குவாயாக. இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் கண்ணியத்தைத் தருவாயாக! குவைத் நாட்டையும் ஏனைய அனைத்து முஸ்லிம் நாடுகளையும் பாதுகாப்பாகவும் அமைதியாகவும் ஆக்கி அருள்வாயாக! எங்கள் ஆட்சியாளர்களுக்கும் தலைவர்களுக்கும் நன்மைகளின் பக்கம் வழிகாட்டுவாயாக! ஆமீன்

**ஜும்ஆ தொழுகைக்கான மாதிரி குத்பா தயாரிப்புக் குழு**